உ
சிவமயம்

# நா[illegible]யண தீபம்



கீரிமலை, நகுலேஸ்வரத்தைப் பிறப்[illegible]ம்,
கொக்குவில் அம்மன் வீதியை வசிப்பிடமா[illegible] கொ[illegible]
யாழ்ப்பாணம் வண்ணார் பண்[illegible]
ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத ஸ்வாமி ஆலய பிரத[illegible] குரு

அமரர்

# பிரம்மஸ்ரீ கிருஷ்ணஐயர் நாராயணக் குருக்கள்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## ஞாபகார்த்த வெளியீடு

07.12.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 – 07 – 1957 | 28 – 11 – 2018 |

# சிவஸ்ரீ. கிருஷ்ண ஐயர் நாராயண குருக்கள்

(ஸ்ரீ கதிரேசன் கோயில் ஐயா)

திதி : கார்த்திகை மாத அபரபக்ஷ ஷஷ்டி

## திதி வெண்பா

ஆண்டு விளம்பி ஆன திங்கள் கார்த்திகையில்
தீண்டு அபர பக்ஷ் ஷஷ்டி தனில் – மீண்டு
வாராத கதிரேசன் பாதத்தில் நாராயணக் குருக்கள்
சேர்ந்த நன் தினமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன் சொல் பேசி அன்புடன் எம்மை
பேணி காத்து அன்புடன் அறிவும் தந்து
பண்போடு பாசமிருந்து
ஆன்மிக வழியில் நின்று அறிவுகள்
பல புரிந்து எம் குடும்ப பெருவாழ்வுக்காய்
மெழுகென உருகி வாழ்ந்து
ஒளியது பரப்பி நின்று
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது குடும்ப தெய்வ தந்தைக்கு
அவர்தம் நினைவாக கண்ணீர் எனும்
நெய்தனை ஊற்றி
நாம் ஏற்றி வைக்கின்ற தீபம் இது.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ் சகித பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின் பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின் பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின் பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந்தேத்த
அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய
பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறி நின்றென்னுள் எழு பரஞ்சோதி
உள்ளவா காண வந்தருள்வாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணக்கருவிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகு திரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய் மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண் குளிரக் கண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட் பரமர்க்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்து வாக்கத் தமரும் அடிபேண
பத்துத் தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் தகிரியில் இரவாக
பத்தர்க்கிரதத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத்துடன் ரட்சித்தருள்வதும் ஒருநாளே
தித்திக்கெய வொட்கப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்க நடிக்கக் கழுகொடு கழுதாட
திக்குப் பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப் பவுரிக்குத் திரிகிட எனவோத
கொட்டுப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற்றவுணரை
வெட்டிப்பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

தென்னிந்திய கேரளா மாநில திருவனந்தபுரத்தை பிறப்பிடமாக கொண்ட அமரர் பிரம்மஶ்ரீ ஷேஷ ஐயர், கிருஷ்ண ஐயர், கோமதியம்மா தம்பதிகளின் சிரேஷ்ட குமாரர் (ஒன்பதாவது) கீரிமலை, நகுலேஸ்வரத்தை, பிறப்பிடமாகவும், கொக்குவில் 24/3 அம்மன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை, ஶ்ரீ செந்தில் கதிர்வேலாயுத ஸ்வாமி ஆலய பிரதம குரு அமரர் பிரம்மஶ்ரீ. நாராயணக் குருக்கள் அவர்கள் சிறுவயது முதல் திருக்கேதீஸ்வர வேதாகம பாடசாலையில் ஆரம்பகல்வியை சுப்ரமணிய சாஸ்திரிகளிடம் (இந்தியா) பின் பதினொரு வயதில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதமகுரு Dr. சிவஶ்ரீ. சோமாஸ்கந்த சிவாச்சாரியாரால், உபநயன பிரம்ம உபதேசம் பெற்று பின் பதினைந்து வயது முதல் இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் சிவஶ்ரீ. தானு மகாதேவக் குருக்களிடம், வேதாகம கல்வியை கற்றார். பத்தொன்பதாவது வயதில் நயினை நாகபூஷனி அம்பாள் ஆலய குரு சிவஶ்ரீ. கைலாசநாத சிவாச்சாரியாரிடம் ஆச்சார்ய அபிஷேகம் (குருக்கள்) பெற்று, யாழ்ப்பாணம் ஶ்ரீ செந்தில்கதிர் வேலாயுத ஸ்வாமி ஆலயத்தில் 1979ம் ஆண்டு முதல் பிரதம குருவாக கடமையேற்று இறைபணி ஆற்றி வந்தார்.

பின் இல்லற வாழ்க்கையை 26-01-1983 முதல் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தை சார்ந்த பிரம்மஶ்ரீ. சபாரட்ணக் குருக்கள், கோமதியம்பாளின் பேத்தியும், கோப்பாய் கந்த ஸ்வாமி ஆலய பிரதம குரு சித்தாந்தபானு, பிரம்மஶ்ரீ. சுப்ரமண்ய குருக்கள், இரத்தினசௌந்தர்ய அம்மாவின் பேத்தியும், கீரிமலை உபதபால் அதிபர் பிரம்மஶ்ரீ. சபா சப்ரமண்ய சர்மா, பத்மாவதி அம்மா தம்பதிகளின் மகளாகிய கல்பனாகௌரியை தனது இருபத்தாறு வயதில் இல்லத்தரசியாக ஏற்று திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை ஆரம்பித்து இனிதே சிறப்பாக வாழ்ந்து வந்தார்.

இவரின் சகோதரர்களாக, மூத்த சகோதரர் சிவஶ்ரீ. கி. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களை தனது தந்தையின் ஸ்தானத்தில் வைத்து அவரது அறிவுரைகளை கேட்டு வாழ்ந்து இளைய சகோதரர் சிவஶ்ரீ. பரமேஸ்வர சர்மா மற்றும் தன் சகோதரரிகளான ஒன்பது பேருடன் வாழ்ந்தார்.

10.12.1983 அன்று சீமந்த புத்திரன் பிரம்மஶ்ரீ. கிருஷ்ணமோகன் (மலேசியா) 07-10.1985 அன்று கனிஷ்ட புத்திரன் பிரம்மஶ்ரீ. கிருஷ்ணராஜ் (அவுஸ்ரேலியா) 10.12.1991 அன்று கனிஷ்ட புத்திரி செல்வி. துளசிகாவையும் பிள்ளைகளாகப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.07.2010 அன்று யாழ்ப்பாணம் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத ஸ்வாமி ஆலய மஹா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தி வைத்த பெருமை அவருக்கு உண்டு. பின் 12.07.2010 அன்று தனது சீமந்த புத்திரனுக்கு தனது கரங்களால் சிவாச்சார்ய அபிஷேகம் (குருப்பட்டம்) செய்து மலேசியா சிவஸ்ரீ. சிவராம ஐயர், மஹாலக்ஷ்மி தம்பதிகளின் சீமந்த புத்திரி, நீலாம்பரி எனும் (நீலா) கன்னியை தனது மூத்த மகனுக்கு 11.11.2016 அன்று திருமண வைபவம் நடாத்தி வைத்து பின் தனது கனிஷ்ட புத்திரனாகிய கிருஷ்ணராஜ் சர்மாவை அவரின் கல்வி வளர்ச்சிக்காக (அவுஸ்ரேலியா) அனுப்பி அவரின் முன்னேற்றத்தையும் கண்டு மகிழ்ந்து பின் நல்லூர் மங்களபதி வைத்தியசாலை Dr. இ. லக்ஷ்மண ஐயர், நாகபூஷணி தம்பதிகளின் இரண்டாவது புத்திரி (நிவேதினி) என்னும் கன்னியை 06-05-2018 அன்று தனது கனிஷ்ட புத்திரனுக்கு திருமணம் செய்து வைத்தார். தன்னுடையஅன்பிற்கும், பாசத்திற்கும் பாத்திரமாகிய கனிஷ்ட புத்திரி செல்வி. துளசிகாவை குலப் பண்போடு இருபத்தைந்து வருடங்களாக வளர்த்து மகளின் கல்வி, கலைத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று கல்வியங்காடு, நாயன்மார்கட்டு ராஜராஜேஸ்வரி ஆலய பிரத குருவும், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ("சிவஸ்ரீ. சாம்பசிவ சிவாச்சாரியார்) தம்பதிகளின் பேரனும் கனடா சிவஸ்ரீ. Dr. சோமாஸ்கந்த சிவாச்சாரியார் சுசிலாதேவி தம்பதிகளின் சீமந்த புத்திரன் பிரம்மஸ்ரீ. கோபி கிருஷ்ண சர்மாவை (கனடா) நிச்சயார்த்த வைபவம் நடாத்தி, பதிவுத்திருமணம் செய்து வைத்து இன்புற்று இருந்தார்.

தனது 60 அகவையில் ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுத ஸ்வாமி ஆலய மண்டபத்தில் 27.04.2018 அன்று பிள்ளைகள், நண்பர்கள், பெரியோர்கள், மருமக்கள், சகோதர, சகோதரிகள், ஆலய அன்பர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து அரவணைத்து மங்களகரமான "சஷ்டியப்த பூர்த்தி" விழாவை நிறைவுற கண்டு மகிழ்ந்ததோடு தனது வாழ்க்கையில் இறைபணியை 19 வயது முதல் 61 வயது வரை 43 ஆண்டுகளாக அனைத்து நாடுகளின் பல மஹோற்சவங்களும், பல ஆலய கும்பாபிஷேகங்களும், பல திருமண வைபவங்களும் நடாத்தி வைத்த பெருமை அவருக்கு உண்டு.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சிவார்சார்ய பணியை மிக மன மகிழ்வுடன் சிறப்பாக நடாத்தி வைத்து தொடர்ந்து சமூகப்பணியில் இலங்கை இந்து மத குருமார் ஒன்றியத்தில் ஆரம்பகால பொருளாளராகவும் கடமையாற்றி, கொழும்பு இந்துகுருமார் அமைப்பின் ஆலோசகராகவும், அந்தண சமூகத்தின் அனைத்து வைபவங்களிலும் தனது உள்ளன்புடன் சேவை நிறைவேற்றி மகிழ்ந்து சமூகப்பணியில் இன, மத பேதமின்றி அனைவருக்கும் ஆலோசனை வழங்கி அனைவரின் அன்பிற்கும் பாத்திரமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் தனது 61வது அகவையில் தனது ஆலயத்தின் ஸ்கந்தஷஷ்டி வைபவம், திருக்கார்த்திகை வைபவம் என்பவற்றை சிறப்பாக நடாத்தி வைத்து ஷஷ்டி திதி அன்று மாலை 4.00 மணியளவில் ஆலய நித்திய பூசைக்கு செல்லும் வழியில் குல தெய்வமாகிய தர்மசாஸ்தா ஐயப்பனும், முருகப் பெருமானும் உங்களுடைய சேவை இனிமேல் போதும் என்று எண்ணி தன்னுடைய பாதக்கமலங்களில் அணைத்துக் கொண்டார்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்

என்னுடனே பிறந்தவரே
எங்கே சென்றாய்
இனியும்மை காண்பதெப்போ
இப் பூமியிலே
அன்போடும் பண்போடும்
வாழ்ந்தவரே
மின்னலென மறைந்தாயோ
எம் சொந்தம்விட்டு

## மைத்துனர்

மைத்துனரே எம்மையெல்லாம்
மகிழ்வோடு சோதரராய்
உத்தமராய் வழிகாட்டி
உவப்போடு பேசுவீரே
வந்ததொரு துயர் என்றால்
வந்துதவும் நல்லாரே
சொந்தமென எமைவிட்டு
சொல்லாமல் சென்றீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்பின் திருவுருவே! அழகுமிகு மன்னவரே
பண்பின் இருப்பிடமே பார்போற்றும் நல்லவரே
துன்பம் காணாத வாழ்வதனை தந்தீரே
கந்தன் கதிரேசன் கழல டிக்கே சென்றீரோ?

கைபிடித்த நாள்முதலாய் கவலை தெரியாமல்
மைவடித்த கண்ணதனில் கண்ணீர் வராமல்
தையலென்னை காத்திருந்தீர் தாயாக பார்த்திருந்தீர்
கைவிட்டு கதறவிட்டு கடுகியே சென்றதென்ன?

வாழ ஒரு வீடுகட்டி வளமாக இரு மைந்தருக்கும்
வாழ்க்கையதைத் தேடித் தந்து வண்ணமகள் துளசிக்கும்
கோலமிகு கனடாவில் கோபி தனை நிச்சயித்தீர்
காலமினிப் போதுமெனக் கந்தனிடம் சென்றீரோ?

## மகன் பிள்ளைகள் புலம்பல்

பெற்றெடுத்துப் பெயர் கொடுத்து
பேறுகல்வி தான் கொடுத்து
கற்றவர்கள் முன்னிலையில்
கற்ற சபை போற்ற வைத்தீர்
நற்றதொரு கன்னியரை
துணை நலமாய் ஆக்கி வைத்தீர்
வெற்றுடலாய் நாம் பார்க்க
விறகினிலே வெந்தீரே!

ஆர்வமுடன் ஆவலாய்
அறுபதாம் கல்யாணம்
ஆசையுடன் நடத்தி வைத்தோம்
ஆண்டொன்று ஆனதை
யார்கண் தான் பட்டதுவோ
யார் உம்மை அழைத்தாரோ!
ஊர்கூடி அழவைத்து
ஊமையாய் சென்றீரோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்றார் உறவினர் புலம்பல்

ஈடுசெய்ய முடியாத
எங்கள் உறவே உன்போல்
யாருமில்லை வையகத்தில்
நாம் காணும் நல்லவரே
பாழ்பட்ட காலன் உமை
கருணையின்றி கவர்ந்தானோ!
வாழ்விதுதான் யாவர்க்கும்
வாய்விட்டு கதறி என்ன?

## அன்பு மகள் புலம்பல்

அப்பா அப்பா என்று அனுதினமும்
கதறுகிறேன்
எப்போ இனி உங்கள் திருமுகத்தை
நான் காண்பேன்
எப்போதும் நானிருப்பேன்
எதற்கும் தயங்காதே
என்று சொல்லும் அப்பாவே!
இன்று எங்கே போனீரோ!

எந்தன் வாழ்க்கைக்காய்
துணை வரையும் நிச்சயித்து
எந்தன் திருமணத்தை
கண்டு தான் போவேன் என்றீர்
வெந்து மனம் துடிக்க
வேரறுந்த மரமாகி
நொந்து தினம் கதறுகிறேன்
அப்பாநீர் எங்கு சென்றீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் வாழ்க்கையில்

நீ வாழும் போது சிலரை வாழ வை. அவர்கள் நீ இறந்த பின்னும் உன்னை வாழ வைப்பார்கள்

பொருள் இருந்தால் தான் பிறருக்கு உதவ முடியும் என்று எண்ணி விடாதே. உடலாலும் உள்ளத்தில் இருந்து வரும் இனிய சொற்களாலும் உதவலாம்.

இன்பத்தை தேடித் தேடி அலைய வேண்டாம். ஆனால் இன்பமாய் இருக்க எந்த நேரமும் தயாராக இருங்கள்.

உன் வாழ்க்கையில் நீ எதையாவது இழக்க நேரிட்டால் அது உன் உயிருக்கு மேலானதாக இருந்தாலும் அதைப்பற்றி வருந்தாதே.

இல்லை என்று ஒரு போதும் கூறாதீர்கள். உங்களுக்கு தேவையான எல்லா வலிமையும் உதவியும் உங்களுக்குள்ளேயே குடிகொண்டு கிடக்கிறது.

எவ்வாறு நூலைச் சேலையாக்க முன்னர் அதைச் சீர்படுத்துகிறோமோ அதுபோல் இளமையிலேயே எமது பழக்கத்தை சீர்படுத்திக் கொள்ளவேண்டும்.

நீ பேசுவதை எல்லாம் சிந்தித்துப் பார் சிந்திப்பதை எல்லாம் பேசி விடாதே.

தோல்வியே தொடர்ந்தால் நீ தயங்காதே. பெரும் பெரும் முன்னேற்றத்தைக் கண்டவர்கள் கூட வாழ்க்கையில் எத்தனையோ தோல்விகளைத் தொடராக அனுபவித்தவர்கள் தான்.

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக் கூடாது என்று நினைக்கிறாயோ அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே!

உனது எதிராளியின் விமர்சனத்தை நன்றாக கேட்டுக்கொள். ஏனெனில் அவன்தான் உன்னுடைய குறைபாடுகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பவன்.

நண்பர்களிடம் உங்கள் கடந்த காலத்தைப் பற்றிப் பேசாதீர்கள், உங்கள் உறவினர்களிடம் வீட்டு வருமாத்தைப் பற்றி பேசாதீர்கள், உங்களை விட வசதியானவர்களிடம் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி பேசாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

மேலைப் புண்ணிய பாவங்கட்குப் பொருத்தமாறு இறைவனால் ஆன் மாக்கட்குப் பிறப்பு கொடுக்கப்படுகிறது. இப்பிறப்புகளில் மானுடப் பிறப்பு சிறப்புடையது. இம் மானுடப் பிறப்பிலும் சைவ சமயத்தவராகப் பிறப்பது சிவ புண்ணியச் சார்பாகும். சைவராகப் பிறவி எடுத்தமையால் சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வேத சிவாகம நெறிப்படி வழிபட்டு சைவ சித்தாந்த அத்துவித முத்தியாகிய பேரின்ப பெருவாழ்வு அடைய முற்படல் வேண்டும். இது தான் மானுடப் பிறப்பின் முற்றாக முடிந்த முடிபாகும்.

எல்லாச் சமயங்கட்கும் அவற்றிக்கெனத் தனித்தனியே பலசமயச் சடங்குகள் இருப்பதை நாமறிகின்றோம். சைவராகிய எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் பல சமயச் சடங்குகள் நடைபெறுகின்றன. இவையாவும் சிவாகமங்களில் விதிப்படி நடைபெறுகின்றன. அப்படியே நடைபெற வேண்டியது இன்றியமையாதது. சைவர் ஒருவரின் மரணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகள் அபரக்கிரியை எனப்படும். (அபரம்-பிந்தியது). இக் கிரியைகள் இறந்தவரின் ஆன்மாவின் நன்மைக்காகச் செய்யப்படுகின்றன. ஆன்மா எப்பிறவி எடுத்திருப்பினும் பிதிரர்களின் மூலமாக கிரியைகளின் பயனை அந்த ஆன்மா பெறுகின்றது. பிதிரர்கள் பிரமனால் படைக்கப்பட்டவர்களாகும். இக்கிரியைகளைச் செய்பவர்கள் தன தானிய சம்பத்து புத்திரலாபம் முதலிய ஐசுவரியங்களைப் பெற்று வாழ்தலுடன் மறுமையில் நற்கதியையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும். செய்யாது விடின் ஏழு பிறப்பிலும் பிதிர் தோஷம் ஏற்படும்.

அபரக்கிரியையில் சூர்ணோத்ஸவம், தகனம், அஸ்திசஞ்சயணம் (காடாற்று) அந்தியேட்டி பாஷாண பூஜை (கல்லெடுப்பு) ருத்திர பலி (பிரபூதபலி) நவசிராத்தம், ஏகோத்திரவிருத்தி, சம்கிதை, இடபாதனம், ஏகோதிட்டம், மாசியம், சோதகும்ப சிராத்தம், சுவர்க்கமாதேயம், வைதரணிகோதானம், சபிண்டீகரணம் (வீட்டுக் கிரியை) சிராத்தம் முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன.

இவற்றில் விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி ஆகியவை பிரேதத்திலேயே (கட்டையிலேயே) தகனத்திற்கு முன்னர் நடைபெறும். மச்ச மாமிச போசனமற்ற நாலாம் வருணத்தார்க்கும் பிரேதத்தில் சமய அந்தியேட்டி தகனத்திற்கு முன் செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட கிரியைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆசாரியாரைக் (குரு) கொண்டு செய்விக்க வேண்டும். இவற்றைச் செய்விப்பவர்களும் (கர்த்தா) கிரியைகளின் தத்துவங்களையும் அவற்றின் பலன்களையும் அறிந்து பக்தி சிரத்தையுடனும், அன்புடனும் செய்தால் நன்மை பயக்கும். இக்கிரியைகளிற் பல தானங்கள் செய்யப்படுகின்றன. தானம் என்பது நற்பயன் குறித்துச் செய்யப்படுபவை. எனவே இத்தானங்களை சற்பாத்திரத்திற்குச் செய்தாற்றான் குறித்த பயனைப் பெறலாம்.

நாலாம் வருணத்தார்க்கு ஏற்படும் சில சந்தேகங்களை நூலறிவு, அனுபவம் உள்ள ஆசாரியார் சிலரிடமே கேட்டு அறிய முடிகிறது. இக் கிரியைகள பற்றிய நூல்களும் இன்று கிடைப்பது அரிது. இக்கிரியைகளின் தத்துவங்களையும் சாதாரண கல்வியறிவுடைய எவரும் வாசித்து விளங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனடைய முடியுமென்ற முறையில் இக்கட்டுரை அமையுமென நம்புகிறேன்.

சமய தீட்சை பெற்ற நாலாம் வருணத்தாருக்கும் முப்பது நாள் ஆசௌசமுடையவர்களுக்கும் உரிய கிரியைகளையும் அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் ஓரளவு இக்கட்டுரையில் விளக்கிக் காட்டியுள்ளோம். கிரியை செய்யும் முறைகள் அவற்றிற்குரிய மந்திரங்கள் ஆகியவை இக்கட்டுரையில் இடம்பெறவில்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்ட அல்லது வயோதிபமடைந்து மரணப்படுக்கையில் இருக்கும்பொழுது அவரது பாவங்கள் நீங்க நற்கதி அடையும் பொருட்டு கோ (பசு) தானம் செய்யப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் என்பர். இது உயிர் உடலை விட்டுப் பிரியும்போது செய்யும் கிரியையாகும். பின்னர் திருமுறைகள் ஓதவேண்டும். திருநீறு அணிவித்து புண்ணிய தீர்த்தம் அல்லது பால் பருக்கி வலது காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓதவேண்டும்.

மரணித்தவரை குளிப்பாட்டி அலங்காரம் செய்து தர்ப்பைப்புல் பரப்பி தெற்குப்பக்கம் தலை வைத்துக் கிடத்த வேண்டும். தலைப்பக்கம் விளக்கேற்றி வைக்க வேண்டும்.

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே கிரியை செய்ய வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும் தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும் கிரியை செய்யும வழக்கம் உண்டு. புத்திரர் தவிர்ந்த பின்வருவோரும் கிரியை செய்ய உரிமை உடையர்.

| | | |
|---|---|---|
| புத்தரன் | தாய் | தாயின் சமானோதகன் |
| மனைவி | மருமகன் | சீடன் |
| மகள் | சகோதரி | குரு |
| தமையன் | சகோதரி புதல்வன் | மகள் கணவன் |
| இளைய சகோதரன் | பிதாவழிச் சபிண்டன் | தோழன் |
| சகோதரன் புதல்வன் | சமானோதகன் | அரசன் |
| பிதா | தாய்வழிச் சபிண்டன் | |

அவர்களுள் புத்திரனே பிரதானமானவன். பிரதான கர்த்தா இல்லையாகில் அடுத்தவர் வரிசையாக பிரதானமானவர்கள். சில நூல்களில் 32 பேர்கள் கூறப்பட்டுள்ளன. புத்திரன் இல்லாத ஒருவர் கர்த்தாவாக கிரியை செய்வதாகில் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது கிரியை செய்தவராக இருத்தல் வேண்டும். புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ளவர் ஒருவர் செய்தால் புத்திரர் பின்னர் வருவராகில் எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம். அதேபோல் புத்திரர் மரணக் கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்கமுடியாது விட்டால் மற்றைய கிரியைகளை வேறு ஒருவர் கர்த்தாவாக இருந்து செய்யலாம். ஆனால் இவரும் ஆரம்பக் கிரியையிலேயே கர்த்தாவுடன் சேர்த்துக் கிரியைகள் செய்ய வேண்டும்.

அந்தியேட்டி கிரியை மாத்திரம் 21 நாட்களுக்கு மேலும் 31 நாட்களுக் குள்ளும் செய்யலாம். புத்திரன் வெளியூர் போகவேண்டும் என்பதற்காக இத்தினங்களுக்கு முன்னதாக அந்தியேட்டி சபிண்டிகரணம் முதலியவற்றை செய்ய முடியாது. மரணக்கிரியை நடைபெற உள்ள இடத்தில் மண்டபம் அமைத்து வெள்ளைகட்டி மாவிலை தோரணம், பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து அந்த இடத்தை கோமயத்தினால் மெழுக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணக் கிரியையின் போது (பக்தி ஸ்தோத்திரம்) திருமுறைகள் ஓதல் வேண்டும்.

மரணக்கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பமும் அதனைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர் கும்பமும் மேற்குப் பக்கத்தில் புண்ணியாகவாசன கும்பமும் கிழக்குப் பக்கத்தில் உரல், உலக்கை, பேரிக்குப் பதிலாக மணி மயானத்துக்கு கொண்டு செல்லும் மண் குடம் கும்பம் ஆகியவை வைக்கப்படும். இக்கும்பத்தை மயானத்திற்கு கொண்டு செல்வது வழக்கமாகவுள்ளது. குரு உரிய கிரியைகள் பூசைகள் வழிபாடுகள செய்வார்.

அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு பிரேதத்தை வீட்டின் தென்புறத்தில் வடக்கு நோக்கிக் கிடத்த வேண்டும். பின்னர் கர்த்தா அரப்பு எண்ணெய் முதலியன சிரசில் வைப்பார். ஆசௌகாரர்களும் அரப்பு எண்ணெய் முதலியன வைப்பார்கள். பின்னர் அரிசிமா மஞ்சள்மா அபிஷேகக்கூட்டு, பால், தயிர், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்று சங்காரக்கிரமமாக அதாவது கீழிருந்து மேலாக கர்த்தாவின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இவ்வபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும். அதாவது பன்னீர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியவற்றைச் சிரசிலே சாத்த வேண்டும். பின்னர் பிரேதத்தை அலங்கரித்து மண்டபத்திற்குக் கொண்டு வந்து தெற்குப்பக்கமாகத் தலையை வைத்து திருநீறு சங்காரக் கிரமமாக சாத்த வேண்டும். பின்னர் சுண்ணம் இடிக்கப்படும்.

அறுகு மஞ்சள்பொடி என்பவற்றை உரலில் இட்டு பேரிக்குப் பதிலாக மணி அடித்து 81 பத மந்திரம் சொல்லி எட்டு தரம் இடித்து பின்பு திருப்பொற் சுண்ணம் இடிக்க வேண்டும். பின்னர் சுண்ணப்பொடியை கர்த்தா பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி நீருடன் சேர்த்து பிரேதத்தின் முழு உடலிலும் தெளித்தல் ( புரோட்சித்தல்) வேண்டும். இது தற்காலம் நடைபெறும் முறையாகும். ( சுண்ணமிடித்து சுண்ணப்பொடியும் சேர்த்து பிரேத அபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும்.)

பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்டு பிரேதத்தின் வாய், கை, கால், விரல்கள் ஆகியவற்றைக் கட்டி பூத உடலை வஸ்திரத்தால் மூடிக்கட்டி பாடையில் வைத்து கால் முன்பக்கமாக மயானத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். கர்த்தா நெருப்புச்சட்டியுடன் பூதவுடலுக்கு முன்பாகவும் ஆசௌச உரிமையாளர்கள் பூதவுடலுக்கு பின்பாகவும் செல்ல வேண்டும். ஆசௌசமில்லாதவர்கள் பின் செல்லல் கூடாது. மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக முதலில் தலைப்பக்கமும் பின்னர் கால்ப்பக்கமுமாக இறக்குக. மயானத்தில் வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேல் பூத உடலை வைத்து சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். பின்னர் கர்த்தா மட்குடத்தை இடது தோளில் வைத்து சிதையை இடப்பக்கமாக சுற்றி வந்து குடத்தை தலைப்பாகத்தில் வைத்து கும்ப ஜலம் அரிசி சொர்ணம் அல்லது காசுடன் வாய்க்கரிசியிட்டுப் பின்னர் குடத்தை முன்போல் இடத்தோளில் வைத்து கொள்ளியைக் கையில் கொண்டு சிதையை இடப்புறமாக மூன்று முறை சுற்றி வர வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் குடத்தில் கத்தி நுனியால் துவாரமிட்டு குடநீர் ஒழுகும்படி செய்து மூன்றாவது சுற்று முடித்து தலைப்பக்கத்தில் தெற்கு முகமாக நின்று பின்புறமாக பிரணவம் சொல்லிக் கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து குடத்தை முன்புறமாக உடையும்படி போட்டுவிட்டு பின்பு கால்மாட்டில் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்திரம் பூணூல் ஆகியவற்றை சிதையில் போட்டு விழுந்து நமஸ்கரித்து திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கர்த்தாவும் மச்ச மாமிச போசனம் இல்லாதவர்களாயின் இறந்தவருக்கு உடன் மயானத்தில் அந்தியேட்டிக கிரியை செய்து தகனம் செய்யப்படும்.

## அஸ்தி சஞ்சயனம் - காடாற்று - சாம்பல் அள்ளல்

தகனத்திற்கு அடுத்தநாள் அல்லது மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் நாள்கள் ஒன்றில் அஸ்தி சஞ்சயனம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால்பக்கமாக இருந்து தலைப்பக்கமாக தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும். தலைப்பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேக திரவியங்களை வைக்கவும். மண்கலசத்தில் பால் ஊற்றி அதை தலைப்பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும். தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனியில் முழு உருவமாக இருப்பதாகப் பாவனை செய்து கீழிருந்து மேலாக அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்க.

கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் முழங்கால்கள் (சத்தியோசாதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புஷம்) தலை (ஈசானம்) ஆகிய ஐந்து இடங்களிலும் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டிலுள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும். பின்னர் மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும். பின்னர் அவ்விடததை சுத்தம் செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மா அடை, தாம்பூலம், பழம் முதலியவைகளை பூதப்பிரதேச பைசாசங்களின் பொருட்டுப் பலியிட்டு, முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தியையும் கடகத்தில் எடுத்த மிகுதி அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம் சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்கு முகமாக நின்று தெற்குப்பக்கமாகப் போட்டுக் கரைத்து விடவும். பின்னர் கர்த்தா அந்த நீர் நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப் பிரச்சாதனம் என்னும் நக்கினதானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தைச்சுற்றி வஸ்திரம் கட்டி வெண்கலப்பாத்திரத்தில் (விளக்கு) நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு பரம சிவனைத் தியானித்து தானமாகக் கொடுக்கவும். இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப்படுகின்றது.

அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக் கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுக் கிரியை

இக் கிரியை பற்றி பத்ததிகளிலோ, ஆகமங்களிலோ எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது. தகனதினம் தொடக்கம் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வீட்டில் ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி தண்ணீர் இளநீர் வைத்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறு பகுதியை அங்கு படைத்து தூப தீபம் காட்டி பூசித்து வரும் வழமை உண்டு. அஸ்தி சஞ்சயனத்தின் பின் எட்டாம் நாளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர் விரும்பிச் சாப்பிட்ட எல்லாப்பண்டங்களும் படைத்து தூபதீபம் காட்டி பூசித்து எட்டுக்கிரியையை முடிப்பார்கள். (சில ஊர்களில் மச்சமாமிசம் உண்பவர்களாக இருப்பினும் அந்தியேட்டி முடியும் வரை மச்ச மாமிசம் படைப்பதில்லை) ஆசௌசகாரர்கள் அங்கு சாப்பிடுவார்கள். (இவை பிரபூதபலி என்ற கிரியைக்குச் சமனாக நடைபெறுகிறது.)

## அந்தியேட்டி - கல்லெடுப்பு

அந்தியேட்டி சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிய விபரங்களே தரப்படுகின்றன. விசேட அந்தியேட்டி நிருவாண அந்தியேட்டி பிரேதத்தில் (கட்டையில்) தகனத்திற்கு முன்னர் செய்யப்படும். மச்சமாமிசம் புசியாதவர்கட்கும் சமய அந்தியேட்டி பிரேதத்தில் செய்யப்படும். அந்தியேட்டி இறந்த 21 ஆம் நாளின் மேல் 31 ஆம் நாட்களுக்குள் செய்யலாம். புத்திரன் அல்லாத வேறு ஒருவர் கர்த்தாவாக இருப்பின் சுப நாள் பார்த்து அந்தியேட்டி செய்ய வேண்டும். நதிக்கரை, குளக்கரை, நந்தவனம், வீடு ஆகிய இடங்களில் அந்தியேட்டி செய்யலாம். அந்தியேட்டி என்பது இறுதியில் செய்யும் யாகம் எனப் பொருள்படும். பிரேத சரீரத்திற்குப் பதிலாக தர்ப்பையினால் புத்துலிகா செய்யப்பட்டு அந்தியேட்டிக்கிரியை செய்யப்படும். சூர்ணோத்ஸவக் கிரியை எல்லாம் முடிந்து புத்துலிகாவை தகனம் செய்வார்கள். இதைப் புனர்த்தகனம் எனக்குறிப்பிடுவர். பின்பு அங்கு பாஷாணம் (கல்லு) ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் பூசை முதலியன செய்து தர்ப்பணம், பிண்டம், ருத்ரபலி, பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தது போன்று) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப்பிண்டங்கள் பச்சை அரிசிச்சாதம் கறிவகைகள், பலகார வகைகள், பழவகைகள், பட்சணங்கள் ஆகியவை சேர்த்துப் பிசைந்து உருட்டி இட வேண்டும். வாஸோதகம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திரவிருத்தி என அழைக்கப்படும் ருத்திரபலி சிவப்பிரீதியின் பொருட்டு செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்கு தூபதீபம் காட்டி பூசை முடித்த கும்பம் பாஷாணம் பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து மங்கல வாத்தியத்துடன் எடுத்துச் சென்று நீர் நிலையடைந்து பிண்டத்தை ஒருவரும் அவர் பின் கும்பத்தை ஒருவரும் அவர் பின் பாஷாணத்தை ஒருவருமாக எடுத்துச்சென்று கர்த்தா இடுப்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று தலைக்கு மேலாக தெற்குப் பக்கமாக ஜலத்தில் விட்டு ஸ்நானம் செய்து வீட்டு வாசலை அடைந்து வேப்பிலை தின்று அக்கினி சாணம் மண் வெண்கடுகு ஆகியவற்றை ஸ்பரிசித்துகல்லின் மேல் கால் வைத்து வீட்டிற்குள் செல்லவும். கர்த்தாவுக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு. உலக்கையைக் கடந்து செல்லும் வழக்கம் உண்டு. இவை வைதீக கிரியை முறையாகும்..

## வீட்டுக்கிரியை - சபீண்டிகரணம்.

வீடு கழுவிச் சுத்தம் செய்து புண்ணியகவாசனம் செய்த பின்னர் வீட்டுக் கிரியை செய்யவேண்டும். அந்தியேட்டிக் கிரியையை முப்பதாம் நாளும் வீட்டுக் கிரியையை முப்பத்தோராம் நாளும் நம்மவர்கள் செய்வது வழக்கமாக உள்ளது. எமக்கு ஆசௌசம் முப்பது நாள்கள். அதாவது முப்பத்தோராவது நாள் காலையில்தான் அசௌசம் நீங்கும்.

அதன் பின்னர்தான் புண்ணியாகவாசம் செய்யவேண்டும். முப்பதாம் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி செய்து அன்று புண்ணியாகவாசனம் செய்து வீட்டுக் கிரியை சமையல் ஆயத்தங்கள் செய்யமுடியாது. எனவே முப்பத்தோராம் நாள் புண்ணியாகவாசனம் செய்து முப்பத்திரண்டாம் நாள் வீட்டுக் கிரியை செய்யலாம். (முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி செய்து அன்று மாலை புண்ணியாகவாசனம் செய்வது நல்லது).

வீட்டுக் கிரியை பிராமண ஆசாரியாரைக் கொண்டு செய்தல் வேண்டும். தானம் ஏற்கும் தகுதி பிராமணருக்குத்தான் உண்டு. முதலில் விக்கினேஸ்வரர் பூசை புண்ணியாகவாசனம் பஞ்சகவவிய பூஜை முதலிய கிரியைகளைச் செய்து நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசிகங்கள், சோதகும்ப சிராத்தம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## நவ சிராத்தம்.

நவம் - புதியது எனவே முதலில் செய்யும் சிராத்தம். நவசிராத்தத்தால் பிரேதத் தன்மை நீங்கும். சந்தனம், புஷ்பம், தூபதீபமின்றி பச்சை அரிசி, காய்கறி வகைகள் தானம் செய்வது நவசிராத்தமாம்.

## ஏகோத்தர விருத்தி

இதை இங்கு இரணிய தானமாகச் செய்யவும். விபரம் அந்தியேட்டிக் கிரியையில் சொல்லப்பட்டுள்ளது.

## சம்கிதை - சங்கிதா சிராத்தம்.

இச் சிராத்தம் செய்வதால் தீட்சை பெற்றுக் கொண்டபின் ஆசாரத்தில் வந்த குற்றம் நீங்கும்.

## இடபதானம் - இடபோததர்ணம்.

எருதுவுக்கு அலங்காரம் செய்து அதனைப் பூசித்து தானம் செய்தல். இறந்தவருடைய தானதரும பலன்களை தரும வடிவிலான் இடபத்தின் மூலம் சிவபொருமானிடத்தில் சேர்ப்பித்தல். ஆன்மாவை இறைவனது திருவருள் வழியின் வண் நிற்குமாறு செய்தலாகும். இடபதானத்திற்கு எருது கொடுக்க வசதி இல்லாதவர்கள் ஒரு தாம்பளத்தில் அரிசியைப் பரப்பி அதிலே இடபத்தை வரைந்து அதன் மேல் தேங்காய் ஒன்றை வைத்து அதில் இடபதேவரை ஆவாகானம் செய்து பூசித்து வழிபாடு செய்த பின்னர் கார்த்தவானவர் தமது இருகரங்களாலும் இடபதேவனைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டுசொல்லப்பட்டுள்ளன. சேன்றதாகம் பாவித்து அதற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்து இதனை தட்சணை முதலியவற்றுடன் தானமாக கொடுக்கவும்.

## ஏதோதிட்டம்

இது இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் தானமாகும். சுற்பாத்திரரான ஒரு குருவை மேற்கு முகமாக இருக்கச் செய்து ஆசனம் கொடுத்து சந்தனம், புஷ்பம், எள்ளு ஆகியவை கொடுத்து உபசாரங்கள் செய்து கர்த்தாவின் சக்திக்கு தக்கவாறு தானங்கள் கொடுக்க வேண்டும். ஏகோதிட்டத்திற்கு இருபத்துநான்குதானங்கள் அவையாவன பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம், வஸ்திரம், பொன், மோதிரம், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருள் கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருள்கள், தாசீ தாசர்கள். இவற்றில் சிலவற்றை இரணியதானம் (காசு) ஆகவும் கொடுக்கலாம். பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோதிட்டத்திற்கு ஒரு பிண்டமிட்டு அதற்கு சந்தன பத்திர புஷ்பம் சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்கவும் பின்னர் ஏகோதிட்டக் கு வை வழியனுப்பி அந்த இடத்தை சுத்திபண்ணி கர்த்தா ஸ்நானம் செய்ய வேண்டும். ஆசாரியார் மீண்டும் புண்ணியாகவாசனம் செய்து பஞ்சகவ்வியத்தினாலே தன்னையும் கர்த்தாவையும் இடத்தையும் பொருள்களையும் சுத்தம் செய்து கொள்வார். ஏகோதிட்டம் ஏற்கும் குருவை இறந்தவராக வர்ணித்துச் செய்வதினால் அங்கு ஆசௌசம் ஏற்படுகின்றது. இதனாலேதான் மேற் கூறியவாறு சுத்திகள் செய்யப்படுகின்றன.

**மாசியங்கள்**

மாசியங்கள் முதல் வருடம் முழுவதும் இறந்த திதியில் செய்யப்படும் சிராத்தமாகும். ஏகோதிட்டத்தோடு முதல் மாசியம் முடிவுற்றதாகக் கருதப்படும். எஞ்சியிருப்பது பதினொரு திதியில் வரும் மாசியமாகும். இவற்றுடன் இடைக்கால மாசியங்கள் நான்கு சேர்ந்து பதினைந்து மாசியங்கள் கொள்ளப்படும். இறந்த திகதியிலிருந்து 27ம் நாளுக்குமேல் 30 ஆம் நாளுக்குள் ஊன மாசியம். 40 நாள்களுக்கு மேல் 45ம் நாளுக்குள் செய்வது ஊனதிரிபட்ச மாசியம். 170 நாட்களுக்குமேல் 180 நாட்களுக்கிடையில் செய்வது ஊனஷான மாசியம். 350 நாட்களுக்கு மேல் 355 நாட்களுக்குள் செய்வது ஊன ஆப்திக மாசியம். இந்த இடைக்கால நான்கு மாசியங்கட்கும் திதி நியமம் கொள்ளப்படுவதில்லை. செய்யும் தினம் சேர்த்து ஏகோதிட்டத்திற்குப் பின்னர் செய்வது வழக்கம். மாசியதானம் செய்து ஒரு மாசியத்திற்கு ஒரு பிண்டமாக பதினைந்து மிண்டமிட்டு சந்தனம் பத்திர புஷ்பம் சாத்தி தூபதீபம் காட்டிப் பூசித்து தர்ப்பணம் செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்டபடி 15 மாசியங்களையும் ஒன்றாகச் செய்தாலும் அந்த மாசியங்களை மாதாந்தம் அந்தந்ததிதியில் செய்வது முறையாகும். சபிண்டீக்குப் பின் மாதாமாதம் செய்யப்படும் மாசியங்கட்டு நிமித்தர் பிண்டம் தேவையில்லை. பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிணடம். இடுக.

## சோதகும்பசிராத்தம் - சொர்க்கபாதோயம்.

நீர் நிறைந்த பாத்திரத்தை அன்னத்துடன் தானம் செய்யவும். இச் சிராத்தத்தால் பசி, தாகம், தீரும்.

## ஐவதரணி கோதானம்

பசுவை தானமாக கொடுக்கவும். இது இரணிய தானமாகவும் செய்யலாம்.

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் செய்வதன் பொருள் ஆன்மாவின் பிரேதத்தன்மை நீங்கி பிதிர்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர் தத்துவத்தை அமையினும் அடையும். னக்குத் தகுதியுண்டேல். அதன் மூலம் இறந்த உயிர் தன் பிரேர்த்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர் தத்துவத்தை அடையினும் அடையும். அல்லது தேவத்துவமடையினும் தனக்குத் தகுதியுண்டேல் சிவத்துவத்தை அடையும். இக்கிரியையில் தேவர் பொருட்டு நந்தி, மாகாளர் என இருவரும் பிதிரர் பொருட்டு கந்தர், சண்டர், கணாதீசர் என மூவரும் அதிதி அப்பியாகதர் என இருவரும் நிமித்தர் ஒருவரும் ஆகிய எண்மர் சபிண்டீயில் அமர்த்தப்படுவர். தேவர் இருவரும் மேற்குப் பக்கத்தில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்குப் பக்கத்தில் மேற்கு முகமாகவும், மற்றைய இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆசனம் கொடுத்து உபசாரங்கள் செய்து பூசைகள் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்கள் கொடுத்து பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். குறிப்பிட்ட உபசாரங்கள் பூசைகள் தேவர்கள் பொருட்டு இருத்தப்பட்ட குருமாருக்குச் செய்யும் பொழுது கர்த்தா பூணூலை வலது பக்கமாக அணிய வேண்டும். சபிண்டியில் பிண்டதானம் ஒரு முக்கிய அம்சமாகும். வாழையிலையை தெற்கு நுனியாகப் போட்டு தெற்கு நுனியாக இரு தர்ப்பைகள் வைத்து மேற்குப் பக்க தர்ப்பையில் இறந்தவர் தந்தையாகில் பிதா, பாட்டன், பூட்டன் ஆகியோருக்கும் கிழக்குப் பக்கத் தர்ப்பையில் இறந்தவருக்காக (நிமித்தர்) பெரிய அளவு பிண்டம் இடவேண்டும். இறந்தவர் தாயாரகில் இதே போன்று தாய், பாட்டி, பூட்டி ஆகியோருக்கு பிண்டம் இடவேண்டும். பிண்டம் வடக்கிலிருந்து தொடங்கி வரிசையாக தெற்கு நோக்கி இடல் வேண்டும். தெற்கு நோக்கி இருந்து இடது முழங்காலை ஊன்றி பிண்டம் இடவேண்டும்.

பின்னர் பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பத்திரபுஷ்பம் முதலியன சாத்தி தீபதூபம் காட்டி பூசிக்க வேண்டும். நைவேத்தியங்கள் வைத்து பூசை வழிபாடு செய்து திருமுறை ஓதி, சரமகவிபாடி, தர்ப்பணம் செய்து கர்த்தாவும் உறவினர்களும் வணங்கி முடிவில் நிமித்த பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திர புஷ்பங்களை எடுத்து பிதிரர் பிண்டத்தோடு சேர்த்தல் மூலம் இறந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார் சபிண்டியில் தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்குச் செய்தலும் தமையன் தம்பிக்குச் செய்தலும், தாய்மாமன் மருமகளுக்குச் செய்தலுமாகிய மூத்தோர் இளையோருக்கு பிண்டம் இடும்பொழுது நிமித்தர் பிண்டம் மாத்திரம் இட்டுக் கிரியைகளை முடிக்குக.

பச்சை அரிசிமா, உழுத்தம்மா, பால், தயிர், நெய், தேன், எள்ளு இவை பிண்டத்திற்குச் சேர்க்கப்படும் பொருள்களாகும்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புத்திரன், புத்திரி அல்லாத ஒருவர் கிரியை செய்தால் பிண்டம் போடும் பொழுது இறந்தவருக்கு மட்டும் பிண்டம் போடவேண்டும். இது ஏகோதிட்ட விதானம். பிதா பாட்டன், பூட்டன் ஆகியோருக்கு பிண்டம் போடக்கூடாது. புத்திரன், புத்திரி பிண்டம் போடும்போது பாட்டன், பாட்டி உயிருடன் இருந்தால் அவர்களுக்கு பிண்டம் போடக் கூடாது. ஆசாரியாருக்கு பாட்டன், பாட்டி உயிருடன் இருக்கும் விடயத்தை தெரிவிக்காது விட்டால் தவறுகள் ஏற்படும். கிரியைகள் முடிந்த பின்னர் குருமாருக்கு தட்சணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று அவர்களை வலமாகப் பின் தொடர்ந்து சென்று வழி அனுப்புக. பிண்டத்தைப் பசுவுக்குக் கொடுக்கவும் அல்லது புண்ணிய தீர்த்தத்தில் போடவும்.

### அப்திக சிராத்தம்.

இதை ஆட்டைத்திவசம் எனக் கூறுவர். முதலாவது வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிராத்தம். இதில் நிமித்தகருக்குப் பிண்டம் இல்லை. இதுவே அபரக்கிரியைகளின் பூர்த்தியாகும்.

### வருட சிராத்தம்.

வருடா வருடம் இறந்த திதியிற் சிராத்தம் செய்யப்படும். சிராத்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப் பொருள்படும். மகன் தந்தைக்குச் செய்யும்போது தகப்பன், பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களை கிழக்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும், வம்சத்திலுள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டத்தை மேற்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் இடல் வேண்டும்.

மகன் தாயாருக்குச் செய்யும் சிராத்தத்தில் தாய், தகப்பனுடைய தாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களும் வம்ச பிண்டம் ஒன்றும் இடுதல் வேண்டும்.

பிள்ளை இல்லாத கணவருக்கு அல்லது மனைவிக்கு இருப்பவர் ஒருவர் சிராத்தம் செய்யலாம்.

தாய் தகப்பன் இருவருக்கும் ஒரே தினத்தில் சிராத்தம் வந்தால் இரு சிராத்தங்களையும் செய்யலாம். (ஆசௌச காரணத்தால் இப்படி வரலாம்.)

மறதியில் சிராத்தம் செய்யத் தவறின் வேறு தினத்தில் அச்சிராத்தம் செய்யக்கூடாது. எதிர்வரும் அமாவாசைத் தினத்தில் அச்சிராத்தத்தைச் செய்யலாம்.

சிராத்தம் கர்த்தாவுக்கு இயலுமான காலம்வரை செய்ய வேண்டும். சிராத்தம் செய்ய வசதியில்லாதவர்கள் அத்தினத்தில் ஆலயம் சென்று பூசை வழிபாடு செய்யலாம்.

## சிராத்தம் செய்யுமிடம்

தன் வீடு, திருநந்தவனம், மாலை, புண்ணிய தீர்த்தக்கரை, திருக்கோவில், குருவின் மனை ஆகிய இடங்களில் சிராத்தம் செய்யலாம்.

## சிராத்தம் செய்யும் காலம்

சூரிய உதயம் முதல் ஆறு நாழிகை வரை (6:00 - 8:24) பிராதக் காலம். அதற்குமேல் 12 நாழிகை வரை (8:24 - 10:48) சங்ககாலம். அதற்குமேல் 18 நாழிகை வரை (10:48 - 1:12) மத்தியகாலம். அதற்குமேல் 24 நாழிகை வரை (1:12 - 3:36) அபரான்ன காலம். அதற்கு மேல் 30 நாழிகை வரை (3:36 - 6:00) சாயாரன காலம். மத்தியான காலத்தில் (10:48 - 1:12) ஏகோதிட்டமும் அபரான காலத்தில் (1:12 - 3:36) பிதிர் சிராத்தமும் செய்க.

## சிராத்த தினத்தில் செய்யத்தக்கவைகள்

திருக்கோயிலில் அபிஷேகம். பூசை முதலியவை செய்யலாம்.

## சிராத்த தினத்தில் செய்யத் தகாதவைகள்.

நெல் குத்துதல், பிச்சையிடுதல், தயிர் கடைதல், நெய் முதலியபொருட்களை வாங்குதல், கொடுத்தல் முதலியன தகாதனவாம்.

## சிராத்தத்திற்குரிய திரவியங்கள்

எள்ளு, பச்சை அரிசி, கோதுமை, பயறு, உழுந்து, சர்க்கரை, தேன்,பசுவின் பால், தயிர், நெய், எண்ணெய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், பயற்றங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, முதலியனவாம் மிளகாய், பூசனிக்காய், கத்தரிக்காய் முதலியன சேர்க்கலாம் எனச்சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

## ஆகாத திரவியங்கள்

கடலை, பீர்க்கங்காய், நீத்துப் பூசனிக்காய், சுரைக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு , கொவ்வை, எருமை, ஆடு ஆகியவற்றின் பால் முதலியனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்தத்திற்கு உபயோகமாகும் பத்திர புஷ்பங்கள்

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவத்தை எள்ளுப் பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியனவாம்.

## ஆகாத பத்திர புஷ்பங்கள்

மகிழம் பூ, தாழம் பூ, அலரிப்பூ, சிறு சன்பகப்பூ, முதலியன. மஹாளயம், பரட்டாதி மாசத்து அபரபக்கம் (அமாவாசைக்கு முன் 15 நாட்கள்) பிதிரர்களின் திருப்தி வேண்டி இச்சிராத்தம் செய்யப்படும். வருட சிராத்தம் செய்ய இயலாதவர்கள் மஹாளயமாவது செய்ய வேண்டும். மற்றைய சிராத்தங்களிலே ஏற்படும் குறைகளுக்கு இது சாந்தியாக அமையும். தந்தை தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக தனித்தனியே பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப்போசனமாகும். அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்பதிக்காக எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தந்தை தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை பயக்கும் இவை ஆட்டைத் திதியின் பின் செய்ய வேண்டும்.

## தநிஷ்டா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு இறந்த வீட்டில் கும்பம், தீபம், ஜலம்இவைகளை வைத்து பசுமாடு கட்டி வைத்து வீட்டில் நெற்பொரி, நவதானியம் தூவுதல் வேண்டும். அவிட்ட நட்சத்திரத்திற்கு ஆறு மாதமாகும். சதய நட்சத்திரத்திற்கு மூன்று மாதமும், பூரட்டாதிக்கு ஒன்றரை மாதமும், உத்தரட்டாதிக்கு ஒரு மாதமும் ரேவதிக்கு அரை மாதமும் தோஷமாகும். தோஷம் நீங்க பஞ்சமி சாந்தி செய்ய வேண்டும்.

## துர்மரணம்

துர் மரணம் அல்லாத அவமிருந்த அடைந்தவருக்கு கிரியை செய்யாது தகனம் செய்யவேண்டும். துர்மரணமடைந்தவருக்கு அங்கமெதிலும் குறைவு படாமலிந்தால் ஆறு மாதத்தின் மேல் இறந்த தேதியிலே அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்யலாம். அங்கங்களில் குறைவு பட்டிருந்தால் ஒரு வருடத்தின் பின்னர் இறந்த திதியில் கிரியைகள் செய்யலாம்.

## வீர மரணம்

வீரமரணம் அடைந்தவர்களுக்கு இயற்கை மரணம் போன்ற கிரியைகள் செய்யலாம்.

## நாந்தி நிராத்தம்

விவாகம் முதலிய சுபகாரியங்கள் நடைபெறும் தினம் அல்லது அதற்கு முன்தினம் பிதிரர்களுடைய ஆசீர்வாதம் பெறும் பொருட்டு இரணியதானமாக (காசு) இவை செய்யப்படும். பிதிர் வழிபாடு செய்யாது எந்த நற்காரியமும் செய்யக் கூடாது.

## தர்ப்பணம்

வலது கையில் எள்ளையும், தர்ப்பையும் வைத்து வலது கைக் கட்டைவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவாக விழும்படி தர்ப்பை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிண்டம் இடுதல்

பிண்டம் இடும்பொழுது கர்த்தா தெற்கு முகமாக இடது முழங்காலை ஊன்றிக்கொண்டிருந்து வலது கைப் பெருவிரலிடையினால் பிண்டம் இடுதல் வேண்டும்.

## தசதானம்

இத்தானம் அந்தியேட்டியில் செய்யப்படும் தானமாக வழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இத்தானத்தை ஒருவர் உயிருடன் உள்ளபோது கொடுப்பது மிகச் சிறந்ததாகும். தசதானம் வருமாறு பசு, பூமி, எள்ளு, காசு, நெய், வஸ்திரம், நெல்லு, வெல்லம், வெள்ளி, உப்பு இதில் சிலவற்றை இரணிய தானமாகக் கொடுக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்துஅழகுஎறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல்திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலம் ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவமைதி தரும் பாடல்

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க.

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்துத் துழாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டதென்றது சாம்பலும் எங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப்போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதிமழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்

பூமிக்கு நாமொரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளித் தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர்க் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



28-11-2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரும், எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த **அமரர் சிவஸ்ரீ கிருஷ்ண ஐயர் நாராயணக் குருக்கள்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்தோருக்கும் எங்கள் துன்பத்தில் பங்குகொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், நேரில் சமூகமளிக்கமுடியாத நிலையில் தொலைபேசி மூலமும், மின்னஞ்சல் மூலமும், அஞ்சல், தந்தி மூலமும், தொலைநகல் மூலமும், வெளிநாட்டிலிருந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைத்து உறவுகளுக்கும், சிறப்பாக நடைபெற ஓடோடி வந்து "காலத்தால் செய்த உதவி ஞாலத்தில் மாணப்பெரிது" என்ற வள்ளுவர் வாக்கை நிதர்சனமாக்கிய யாவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**இங்ஙனம்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

24/3, அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**கௌண்டின்ய கோத்திரம்**

பிரம்மஸ்ரீ ஷேஷ ஐயர் + லக்ஷ்மி அம்மா *

↓

பிரம்மஸ்ரீ கிருஷ்ண ஐயர் + கோமதி அம்மா *

↓

ஜெயலக்ஷ்மி அம்மா *
பாலாம்பிகை அம்மா * + பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் *
பத்மாவதி அம்மா * + பிரம்மஸ்ரீ குகசாமிக் குருக்கள் *
இராமாமிருதம் * + பிரம்மஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள்
மீனாட்சி அம்மா + பிரம்மஸ்ரீ ஜெகன்நாத ஐயர் *
சம்பூர்ணவல்லி + பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள்
பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் + சகுந்தலாதேவி
ஷேஷ அம்மா + பிரம்மஸ்ரீ ஸ்கந்ததாசக் குருக்கள்
**பிரம்மஸ்ரீ நாராயணக்குருக்கள்** *
பார்வதி அம்மா + பிரம்மஸ்ரீ ஞானச்சந்திர சர்மா *
பரமேஸ்வரி அம்மா + பிரம்மஸ்ரீ சிவேந்திரக் குருக்கள்
பிரம்மஸ்ரீ பரமேஸ்வர சர்மா + தங்கம்

**பாரத்துவாஜ கோத்திரம்**

* பிரம்மஸ்ரீ சபாரட்ண குருக்கள் + கோமதி அம்மா

↓

* பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா + பத்மாவதி அம்மா

↓

கௌரிமாலதி + பிரம்மஸ்ரீ சந்திரசேகர சர்மா
பிரம்மஸ்ரீ கௌரிபாலக் குருக்கள் + மஞ்சுஸ்ரீ
**கல்பனாகௌரி**
ஜெயகௌரி + பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக் குருக்கள்
மஞ்சுளாகௌரி + பிரம்மஸ்ரீ முரளீதரக் குருக்கள்

↓

* **பிரம்மஸ்ரீ நாராயணக்குருக்கள் + கல்பனாகௌரி**

↓

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ கிருஷ்ணமோகன் சர்மா | பிரம்மஸ்ரீ கிருஷ்ணராஜ் சர்மா | துளசிகா |
| + | + | + |
| நீலாம்பரி | நிவேதினி | பிரம்மஸ்ரீ கோபிகிருஷ்ண சர்மா |

*அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



சோதிடப் பிரகாச யந்திரசாலை,
கொக்குவில்.

Sivaranjanam - 904

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org